DEPOSITION OF WITNESS

(CHAPTER XXII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE , SENDAMANGALAM

C.C.No.380/2025

PW - 2

| | | |
|---|---|---|
| Name | : | லெனின் (Lw - 3) |
| Father / Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969(Central Act 44 of 1969 on the ------------day of ----------26

**(எதிரி ஆஜர்)**

முதல் விசாரணை **Date : 29.06.2026**

நான் தற்போது நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் காவல்நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன்.

கடந்த 08.07.2025ம் தேதி 17.30 மணிக்கு சேந்தமங்கலம் எனது தலைமையில் தலைமை காவலர் திரு.ராமச்சந்திரன் மற்றும் முதல்நிலை காவலர் திரு.மணிகண்டன் ஆகியோரும் மதுவிலக்கு குற்ற தடுப்பு நடவடிக்கையாக சேந்தமங்கலம் பெருமாபாளையம் காலனி அருகே கண்காணித்து சென்றபோது அங்கு சந்தேகப்படும்படி அங்கு நின்று கொண்டிருந்த பின்னர் பெயர் கேட்டு தெரிந்துகொண்ட எதிரியை பிடித்து விசாரிக்க அவர் தனது பெயர் செல்வம் என்றும் அரசு மதுபான பாட்டில்களை வாங்கி அதிக விலைக்கு விற்பனை செய்து வருவதாகவும், தான் தன்வசம் 180 மி.லி. அளவு உள்ள Express -29 அரசு மதுபான பாட்டில்களை வைத்திருப்பதாகவும் ஒப்புக்கொண்டவரை 18.00 மணிக்கு காரணம் கூறி கைது செய்தேன்.

பின்பு எதிரி தானாக முன்வந்த ஆஜர் செய்த 180 மி.லி. அளவு உள்ள Express -29 அரசு மதுபான பாட்டில்களை 18.30 மணிக்கு தனிநபர் சாட்சிகள் யாரும் முன்வராததால்

தலைமையில் தலைமை காவலர் திரு.ராமச்சந்திரன் மற்றும் முதல்நிலை காவலர் திரு.மணிகண்டன் ஆகியோர் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றினேன்.

பின்பு எதிரி மற்றும் வழக்கு சொத்துடன் நிலையம் வந்து எதிரி மீது நிலைய் குற்ற எண்.158/2025 சட்டபிரிவு 4(1)(C) TNP Act-ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து அதன் அசலை கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பியும், ஒரு நகலை உரிய அதிகாரிகளுக்கு அனுப்பியும், ஒரு நகலை எனது புலன் விசாரணைக்காக எடுத்துக்கொண்டேன். **(**முதல் தகவல் அறிக்கை அ**.**சா**.**ஆ**.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது**.)** பின்னர் எதிரியை தக்க பிணையில் விடுவித்தேன். கைப்பற்றப்பட்ட மதுபான பாட்டில்களை நாமக்கல் காவல் உதவி ஆணையாளர் (கலால்) அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். பின்னர் தலைமையில் தலைமை காவலர் திரு.ராமச்சந்திரன் மற்றும் முதல்நிலை காவலர் திரு.மணிகண்டன் ஆகியோரை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். இறுதியாக எதிரியின் மீது சட்டபிரிவு 4(1)(C) TNP Act-ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

சம்பவ இடத்திற்கு அருகில் நிறைய வீடுகள் மற்றும் கடைகள் உள்ளன என்றால் சரிதான். எதிரி சாக்குப்பையில் மதுபானங்களை வைத்திருந்தாக கூறியுள்ள நிலையில் சாக்குபையை கைப்பற்றினேமா என்றால் இல்லை. எதிரி மதுபான பாட்டில்களை எந்த கடையில் வாங்கினார் என்பதை குறித்து யாரையும் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். எதிரியிடம் இருந்து ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் பெறவில்லை என்றால் சரிதான். புள்ளி விபர கணக்கிற்காக எதிரிமீது வழக்கு பதிவு செய்து அதற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u>**:** இல்லை.

**Taken down before me in open court and read/interpreted to the witness and acknowledged by him/ her to be correct.**

**Sd/- Tr.S.Raja Kumaran B.E. L.L.B.,**
**Judicial Magistrate,**
**Sendamangalam**